# **DEPOSITION OF WITNESS**

( Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, UDUMALPET

Calender : CC

Miscellaneous :

Preliminary Register : Case No of 20

Sessions :

Deposition of ..........Witness for......... : Prosecution
Defence
Court

Name :

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Mobile No. :

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **22nd** Day of **October** 2020.

Signature of witness.

**நாள். 22.10.2020 CC No. 58/2019 அசா.1 முருகானந்தன்**

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு மு.வி)**

நான் எலையமுத்தூரில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு மேற்படி ஊருக்கு கிழக்கு புறமாக கிழக்குத் தோட்டம் என்று அழைக்கப்படும் தோட்டம் உள்ளது. என்னுடைய தோட்டத்திற்கு தென்புறத்தில் 2 ஆம் எதிரி கருப்பண்ணன் வாத்தியார் தோட்டம் இருக்கிறது. மேற்படி கருப்பண்ணன் என்னுடைய தோட்டத்திற்கு கிழக்கு புறமாக பூமி ஒன்று வாங்கினார். மேற்படி கருப்பண்ணன் தென்புறத்தில் உள்ள அவரது தோட்டத்திலிருந்து கிழபுறத்தில் புதிதாக வாங்கிய தோட்டத்திற்கு தண்ணீர் பைப் போடுவதற்காக எனது தோட்டத்திற்கு மேல்புறத்தில் உள்ள தென்வடல் பொது வண்டிப்பாதையில் முயற்சி செய்துள்ளார். வேறு யாரோ அதை தகவல் தெரிந்து தடுத்து விட்டார்கள். சம்பவம் நடப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பாக கருப்பண்ணன் இரவு 08.00 மணிக்கு அவரது தோட்டத்துச் சாளை வழியாக வரும் போது என்னைப் பார்த்து பைப் போடுவதை தடுத்து விட்டாயே என்று கேட்டார். அதற்கு நான் பைப் போடுவதை நான் ஒன்றும் தடுக்கவில்லை என்றும், அதற்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று கூறினேன். ஆனால் அவர் நான் சொல்வதை கேட்காமல் கோபமாக அங்கிருந்து சென்றுவிட்டார். பிறகு இரண்டு நாள் கழித்து 18.09.2018 ஆம் நாள் மாலை 06.15 மணிக்கு பால் எடுத்துக் கொண்டு எனது பைக்கில் நானும் எனது மனைவியும் ஊருக்குள் வரும் பொழுது தன்னாட்சியப்பன் கோவில் அருகே கருப்பண்ணன் வாத்தியார் மகன் 1 ஆம் எதிரி தனசேகரன், அழகியண்ணக் கவுண்டர் மகன் 2 ஆம் எதிரி கருப்பண்ணன் வாத்தியார், வேல் நகரைச் சேர்ந்த 3 ஆம் எதிரி சபரிநாதன் மற்றும் 4 ஆம் எதிரி கார்த்திக் குமார் ஆகியோர்கள் அந்த இடத்தில் நின்று கொண்டிருந்தார்கள். அப்போது எதிரி தனசேகரன், சபரிநாதன் மற்றும் கார்த்திக்குமாரைப் பார்த்து அவனை மறிங்கடா என்று கூறினார். சபரிநாதனும், கார்த்திக்குமாரும் எனது பைக்கை வழிமறித்து நிறுத்தினார்கள். நான் அவர்களை எதற்காக நிறுத்துகிறீர்கள் என்று கேட்டதற்கு எதிரி கருப்பண்ணன் ஏண்டா நான் பைப் லைன் போட்டா உனக்கு என்னடா தாயோழி மகனே, கண்டாரோழி மகனே என்று கெட்ட வார்த்தையால் திட்டினார். அப்போது எதிரிகள் சபரிநாதன், கார்த்திக்குமார், கருப்பண்ணன் வாத்தியார் ஆகிய மூவரும் கைகளால் என்னை முதுகிலும், முகத்திலும் மாறி மாறி அடித்து என்னை கீழே தள்ளி காலால் எட்டி உதைத்தார்கள். நான் எழுந்து நின்ற போது எதிரி தனசேகரன் கையில் மறைத்து வைத்திருந்த இரும்பு கம்பியால் எனது தலையில் அடித்தார். அப்போது நான் எனது இடது கையால் குறுக்காட்டினேன். குறுக்காட்டியபோது எனது மோதிர விரலில் கம்பி பட்டு கை வலித்தது. தலையில் அடித்ததில் எனக்க ரத்தகாயம் ஏற்பட்டது. மீண்டும் அதே கம்பியால்

எனது மூக்கிலும், மூக்கிற்கு கீழும் அடித்ததில் ரத்தகாயம் ஏற்பட்டது. என்னிடம் காட்டப்படும் கம்பி தான் என்னை மேற்படி எதிரிகள் தாக்குவதற்கு பயன்படுத்தியதாகும். **அந்த கம்பி அசாபொ.1 ஆகும்.** அப்போது எனது மனைவி அவர்களை பார்த்து எனது கணவரை அடிக்கவேண்டாம் என்று கதறி அழுதார். அந்த சத்தம் கேட்டு எனது மகள் ஜீவிதா, எனது அப்பா பழனிச்சாமி, அருணாச்சலகவுண்டர் மகன் சாமியப்பன் ஆகியோர்கள் வந்து சண்டையை விலக்காட்டி விட்டார்கள். அப்போது எதிரி தனசேகரன் கையில் வைத்திருந்த சென்ட்ரிங் கம்பியை காட்டி இன்று நீ தப்பிச்சுட்ட என்னைக்கிருந்தாலும் உன்னை சாகடிக்காமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார். அங்கிருந்து எதிரிகள் அனைவரும் சென்றுவிட்டார்கள். எனது மகளும், மனைவியும் என்னை உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்து சிகிச்சைக்கு சேர்த்தார்கள். நான் சிகிச்சையிலிருந்த போது அமராவதி போலீசார் அங்கு வந்து என்னிடம் விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்து கொண்டார்கள். **என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அது அசாஆ.1 ஆகும்.** நான் உடுமலை அரசு மருத்துவமனையில் டிஸ்சார்ஜ் ஆகி கை வலி இருந்ததால் உடுமலைப்பேட்டையிலுள்ள குமரன் தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். அங்கு மருத்துவர் ஈஸ்வரன் ஸ்கேன் எடுத்து பார்த்துவிட்டு கையிலும், விரலிலும் எலும்பு முறிவு இருந்ததால் அவர் சிகிச்சையளிக்க முடியாது என்று கூறியதால் மறுநாள் கிருஷ்ணா கிளினிக்கிற்கு சென்று எலும்பு முறிவுக்கு ஆப்பரேஷன் செய்தேன். போலீசார் என்னை விசாரித்தனர். ஆஜர் எதிரிகள் எனக்கு அடையாளம் தெரியும். அவர்களை சம்பவ இடத்தில் பார்த்தேன்.

**கு.வி இல்லை.**

**நாள். 22.10.2020 CC No. 58/2019 அசா.2 கல்யாணி**

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு மு.வி)**

நான் எலையமுத்தூரில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அசா.1 முருகானந்தன் எனது கணவர் ஆவார். எங்களுக்கு எலையமுத்தூருக்கு கிழபுறத்தில் தோட்டம் இருக்கிறது. அங்கு தான் நாங்கள் குடியிருக்கிறோம். எங்கள் தோட்டத்திற்கு தென்புறத்தில் 2 ஆம் ஆஜர் எதிரி கருப்பண்ணன் வாத்தியாருக்கு தோட்டம் இருக்கிறது. அவர் எங்கள் தோட்டத்திற்கு கிழக்குபுறத்தில் புதிதாக தோட்டம் வாங்கினார். 15.09.2018 ஆம் தேதி மேற்படி கருப்பண்ணன் அவருடைய பழைய பூமியிலிருந்து புதிதாக வாங்கிய பூமிக்கு பைப் லைன் போடுவதற்கு வேலையை ஆரம்பிக்கும் போது யாரோ அதைச் சொல்லி நிறுத்திவிட்டார்கள். அன்று இரவு மேற்படி கருப்பண்ணன் எனது கணவர் ஊருக்குள் சென்றுவிட்டு தோட்டத்திற்கு வரும் போது எனது கணவரைப் பார்த்து பைப் போடுவதை நிறுத்திவிட்டாயல்லவா என்று கேட்டதாகவும், அதற்கு எனது கணவர் பைப் லைன் போடுவதை நிறுத்தியதற்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று கூறியதையும் அவர் கேட்காமல் சென்றுவிட்டதாக எனது கணவர் என்னிடம் சொன்னார். இரண்டு நாள் கழித்து 18.09.2018 ஆம் தேதி மாலை 06.15 மணிக்கு பால் ஊத்துவதற்காக நானும், எனது கணவரும் பைக்கில் சென்று கொண்டிருந்தோம். அப்போது தன்னாட்சியப்பன் கோவில் அருகில் கருப்பண்ணன் வாத்தியார் மகன் 1 ஆம் எதிரி தனசேகரன், அழகியண்ணக் கவுண்டர் மகன் 2 ஆம் எதிரி கருப்பண்ணன் வாத்தியார், வேல் நகரைச் சேர்ந்த 3 ஆம் எதிரி சபரிநாதன் மற்றும் 4 ஆம் எதிரி கார்த்திக் குமார் ஆகியோர்கள் அந்த இடத்தில் நின்று கொண்டிருந்தார்கள். அப்போது எதிரி தனசேகரன், சபரிநாதன் மற்றும் கார்த்திக்குமாரைப் பார்த்து அவனை மறிங்கடா என்று கூறினார். சபரிநாதனும், கார்த்திக்குமாரும் எனது பைக்கை வழிமறித்து நிறுத்தினார்கள். எனது கணவர் பைக்கை நிறுத்தி ஸ்டேண்ட் போட்டுவிட்டு நாங்கள் இருவரும் இறங்கி நாங்கள் அவர்களை எதற்காக நிறுத்துகிறீர்கள் என்று கேட்டதற்கு எதிரி கருப்பண்ணன் எனது கணவரைப் ஏண்டா நான் பைப் லைன் போட்டா உனக்கு என்னடா தாயோழி மகனே, கண்டாரோழி மகனே என்று கெட்ட வார்த்தையால் திட்டினார். பிறகு கருப்பண்ண வாத்தியார், கார்த்திக்குமார், சபரிநாதன் ஆகியோர்கள் கைகளால் எனது கணவரை முதுகிலும், கண்ணத்திலும் மாறி மாறி அடித்தார்கள். நான் அழுது கொண்டு அவர்களை விட்டுவிடும் படி கூறினேன். அப்போது மேற்படி மூன்று நபர்களும் எனது கணவரை காலால் எட்டி உதைத்தார்கள். நான் சத்தம் போடுவதைக் கேட்டு எனது மாமனார், பெரிய மகள் ஜீவிதா மற்றும் சாமியப்பன் ஆகியோர்கள் அங்கு வந்தார்கள். அப்போது எனது கணவர் எழுந்து நின்றார். நின்ற பொழுது எதிரி தனசேகரன் உனக்க இதெல்லாம் பத்தாதுடா

என்று சொல்லி மறைத்து வைத்திருந்த இரும்பு சென்ட்ரிங் கம்பியால் எனது கணவரின் தலையில் மாறி மாறி அடித்தார். அப்போது எனது கணவர் இடது கையால் தடுக்கும் போது கம்பி மோதிர விரலில் பட்டு வலியால் துடித்தார். தலையில் அடித்ததில் ரத்தம் வந்தது. மறுபடியும் அதே சென்ட்ரிங் கம்பியால் மூக்கிலும், மூக்கிற்கு கீழும் குத்தியதால் ரத்தம் வந்தது. நான் எனது மகள், மாமனார், மற்றும் சாமியப்பன் தனசேகரனை தடுக்கும் போது அந்த சென்ட்ரிங் கம்பியை காட்டி எனது கணவரைப் பார்த்து இன்னிக்கு நீ தப்பிச்சுட்ட என்னைக்கிருந்தாலும் உன் சாவு என் கையில் என்று சொல்லி மிரட்டினார். பிறகு நான்கு பேரும் அங்கிருந்து சென்று விட்டார்கள். நானும், எனது மகள் ஜீவிதாவும் எனது கணவரை உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து வந்தோம். பிறகு அங்கிருந்து குமரன் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம். அங்கு ஆப்பரேஷன் செய்ய முடியாது என்பதால் மீண்டும் கிருஷ்ணா மருத்துவமனைக்கு சென்று கையிலும், விரலிலும் ஆப்பரேஷன் செய்தார்கள். இது தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் சென்ட்ரிங் கம்பி தான் எதிரி தனசேகரன் எனது கணவரை தாக்கியதற்கு பயன்படுத்தியதாகும். ஆஜர் எதிரிகள் எனக்கு அடையாளம் தெரியும். அவர்களை சம்பவ இடத்தில் பார்த்தேன்.

**கு.வி இல்லை.**